www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி)
செயல்முறைகள், சென்னை-6.
ந.க.எண். 015670 / டபிள்யு3/இ3/2024, நாள்.03.05.2024

பொருள் :- பள்ளிக்கல்வி - மேல்நிலைக்கல்விப்பணி – அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலை ஆசிரியர்கள்/ உடற்கல்வி இயக்குநர்கள் நிலை-1 /மற்றும் கணினி பயிற்றுநர் நிலை 1 ஆகிய பணியிடங்களில் 01.06.2024 அன்றைய நிலவரப்படி நிரப்ப தகுந்த முதுகலை ஆசிரியர் காலிப்பணியிட விவரம் பாட வாரியாக அனுப்பக் கோருதல் – தொடர்பாக.

----

அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 01.06.2024 நிலவரப்படி முதுகலை ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள் நிலை 1 மற்றும் கணினி பயிற்றுநர் நிலை 1 நிரப்பத்தகுந்த காலிப்பணியிட விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பாடவாரியாக, Excel Sheet ல் (TAU-Marutham font-ல்) தட்டச்சு செய்து dsew3sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு அதன் பிரதியை முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பத்துடன் 10.05.2024 மாலை 3.00 மணிக்குள் தவறாமல் அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் காலிப்பணியிட விவரங்களை அனுப்பும் போது 01.08.2023 அன்றைய நிலவரப்படி பணியாளர் நிர்ணயத்தின்படி ஆசிரியரின்றி உபரி (Surplus post Without Person) எனக் கண்டறிந்து இவ்வியக்குநரின் பொதுத் தொகுப்பிற்கு ஒப்படைக்கப்பட்ட பணியிங்களை எக்காரணத்தைக் கொண்டும் காலிப்பணியிடங்களாகக் கொண்டு வருதல் கூடாது என்றும் கூடுதல் தேவையுள்ள (Addl Need Post) பள்ளிகளின் பெயர்களையும் காலிப்பணியிடங்களாக கருதக் கூடாது என்றும் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

www.Padasalai.Net

சிறுபான்மை பாட காலிப்பணியிட விவரங்கள் தனிப்படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பிவைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் தற்போது அனுப்பப்படும் காலிப்பணியிட விவரங்கள் நாளது தேதியில் அப்பள்ளிக்கு பூர்த்தி செய்ய ஏதுவாக நிரப்பத் தகுந்த காலிப்பணியிடம் *(Eligible Vacancy)* தானா என்பதை உறுதி செய்த பின்னரே உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

/மிக அவசரம்/

இணைப்பு : படிவம் ஒம்/-

இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி)

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.